இறுதியாக 2008-ம்ஆண்டு டிசெம்பர் மாதம் மற்றும் 2009-ம்ஆண்டு ஜனவரி மாத காலப்பகுதியில் விசுவமடு மாவீரர் துயிலுமில்லம் மாத்திரம்தான் விடுதலைப் புலிகளின் ஆளுகையில் இருந்தது. 2009-ம் ஆண்டு ஜனவரிமாதம் 20-ம் திகதிக்குப் பிற்பாடு தர்மபுரத்தையும் தாண்டி சுண்டிக்குளம் சந்திவரையிலும் படையினர் ஆக்கிரமித்திருந்தனர்.

அங்கு நிலைகொண்டிருந்த படையினர் விசுவமடு தேராவில் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். விசுவமடுப் பிரதேசத்தில் தேராவில் என்ற இடத்திலேயே குறித்த விசுவமடு மாவீரர் துயிலுமில்லம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்த அச்சமான சூழ்நிலையிலும் விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுக் கொண்டுதானிருந்தது. சுண்டிக்குளம் சந்தியில் நிலை கொண்டிருந்த அரசபடையினர் எந்த நேரத்திலும் தேராவிலை நோக்கியதாக முன்னேறக்கூடிய அபாய சூழ்நிலை நிலவியதாலும் துயிலுமில்லத்தைச் சூழவுள்ள பகுதிகளில் தொடராக எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததாலும் பாதுகாப்பான வேறோர் இடத்தில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைப்பதற்கான துயிலுமில்லத்தை ஏற்பாடு செய்யவேண்டிய அவசரத்தேவை விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டது.

இதற்கமைவாக இரணைப்பாலையில் பெருந்தோட்டப் பகுதியினரின் ஆளுகையிலிருந்த தென்னங்காணி மாவீரர்களின் வித்துடல்கள் விதைப்பதற்கான துயிலுமில்லமாக நிர்ணயிக்கப்பட்டது. இதேநேரத்தில் தேவிபுரத்தில் “ஆ”பகுதிக் குடியேற்றத் திட்டம் அமைந்திருந்த இடத்திற்கு அண்மையில் மற்றுமோர் துயிலுமில்லத்திற்கான இடம் நிர்ணயிக்கப்பட்டது.